செய்தி வெளியீட்டு எண். 108/2018 நாள்.13.03.2018

**<u>ஒற்றைச் சாளர தீர்வுக்குழுவின் மூலம் இணையதள வழியாக தொழிற்கூட அனுமதிகள்</u>**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியினை விரைவுபடுத்திடவும் மேம்பாடு அடைய செய்திடவும் தற்போது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன தொழிற்கூடங்கள் நிறுவுவதில் ஏற்படும் அனைத்து இடர்பாடுகளையும் களைந்திட தமிழ்நாடு அரசு தொழில் வணிக வசதியாக்கல் சட்டம் மற்றும் விதிகளை (Business Facilitation Ordinance and Rules) 12.01.2018 முதல் நடைமுறைபடுத்தி யுள்ளது.

இந்த சட்டத்தின் மூலம் தொழிற்கூடங்கள் நிறுவுவதற்கு மற்றும் விரிவுபடுத்த தேவையான அனைத்து வகையான அனுமதிகள் /உரிமங்கள்/ நிலம் மற்றும் வரைபட ஒப்புதல்கள்/தடையின்மை சான்றிதழ்கள் பெறுவதற்கான விண்ணப்பங்களை ஒரே இடத்தில் சமர்ப்பித்து குறித்த கால வரையறைக்குள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொழிற்கூடங்கள் நிறுவுவதற்கு முந்தைய அனுமதிகள், நடைமுறை அனுமதிகள், புதுப்பித்தல் ஆகிய 54 வகையான அனுமதிகளை இச்சட்டத்தின் மூலம் பெறலாம்.

அனைத்து தொழில்முனைவோர்களும் www.investingintamilnadu.com எனும் இணையதள முகவரியில் விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டுதல்களைப் பெறலாம்.

இச்சட்டத்தின் படி நியமிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் தலைமையிலான 13 உறுப்பினர்களைக் கொண்ட ஒற்றைச் சாளர தீர்வுக்குழு 15 நாட்களுக்கு ஒரு முறை கூட்டப்பட்டு தொழில் தொடங்கிட மேற்குறிப்பிட்ட அனுமதிகள் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

எனவே, நமது மாவட்டத்தில் தொழில் தொடங்க விருப்பம் உள்ளவர்கள் உரிய அனுமதிகள் பெற மேற்கண்ட இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும், மேலும் விவரங்களுக்கு, பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் ,காஞ்சிபுரம் அவர்களை நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (044-272338837,044-2723 6686,044-2723 8551) தொடர்பு கொண்டு பயனடையுமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.